உ

சிவமயம்

ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை



# CHETTIARS' (NATTUKKOTTAI) CHAMBER OF COMMERCE

31, TANK ROAD, SINGAPORE - 9.

# REPORT FOR 1977

நாட்டுக்கோட்டை செட்டியார்களின்
வர்த்தக சங்கம், சிங்கப்பூர்

# 47-வது வருட அறிக்கை

Chettiars' Temple Society Singapore

Chettiars' Temple Society
Singapore

உ

சிவமயம்

ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

# நாட்டுக்கோட்டை செட்டியார்களின் வர்த்தக சங்கம், சிங்கப்பூர்.

நள-ஷு மாசி-மீ 3-உ முதல்

பிங்கள-ஷு தை-மீ 23-உ வரையிலுள்ள

# 47-வது வருட அறிக்கை

ஸ்தாபிதம்:

(பிரமோதூத-ஷு தை-மீ 5-உ 18-1-1931)

Registered Under the Societies Ordinance

(Chapter 228) 4-4-'62

சங்கக் காரியாலயம்:

31, தேங் ரோடு, சிங்கப்பூர்.

Chettiars' Temple Society Singapore

Chettiars' Temple Society
Singapore

உ

ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

# முகவுரை

அன்புடையீர்!

வணக்கம்.

இன்று நம் சங்கத்தின் 47வது ஆண்டு நிறைவைக் கொண்டாட நாம் இங்கே குழுமியிருக்கிறோம்.

இவ்வாண்டு நம் சங்க உறுப்பினர் எண்ணிக்கை 104.

நம் சங்கம் அரை நூற்றாண்டு நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. கடந்த 47 ஆண்டுகளாக அரசின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப காரியங்களை நடத்தி நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பது யாவரும் அறிந்ததே.

நம் தொழிலும் எவ்வளவோ சோதனைகளுக்கிடையில் சிறந்து வளர்ச்சி அடையாவிட்டாலும் ஒரே சீராக நேர்மையான முறையில் நலமே நடந்து வருகிறது. கால நிலைக்கேற்ப நம் சங்க உறுப்பினர்களும் பல்வகைத் தொழில்களில் ஈடுபட்டு சிறந்த பயனை அடைய முயற்சிப் போமாக.

சிங்கப்பூரில் பலவகைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள நகரத்தார்களையும் நம் சங்க உறுப்பினர்களாகச் சேர்த்து யாவரும் இணைந்து நற்பலத்துடன் நற்பயன் பெற முயற்சிகளும் செய்து கொண்டு வருகிறோம். அடுத்து வரும் ஆண்டுகளில் யாவும் இனிதே நடக்குமென நம்புகிறேன்.

நாம் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அந்த நாட்டிற்கு முழு விசுவாசம் செலுத்தி வாழ்ந்து தொழில் செய்தல் நம் மரபு. அவ்வாறே இந்நாட்டிலும் நாம் செய்து வருகிறோம். இனியும் தொடர்ந்து நாம் இந்நாட்டிற்கும் நமக்கும் நலனும் புகழும் பயக்கும் வினைகளைச் செய்து வருவோம் என்பது உறுதி.

இவ்வாண்டு ஒத்துழைத்த உறுப்பினர்கள், செயற்குழுவினர் ஏனையோருக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடும் நாமும் நம் சங்கமும் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வளமிக்க, நல்வாழ்வு வாழ ஸ்ரீ தெண்டாயுதபாணி திருவருள் பாலிப்பாராக.

நன்றி

**மெ. பெ. மெ. பெரியகருப்பன் செட்டியார்**

தலைவர்

5-2-78

Chettiars' Temple Society Singapore

# நம் சங்கத்திற்கு வரும் பத்திரிகைகள்

## தினப் பத்திரிகைகள்

1. ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ் — ஆங்கிலம்
2. தமிழ் மலர் — தமிழ்
3. தமிழ் முரசு — ,,
4. தமிழ் நேசன் — ,,
5. தினமணி — ,,

## வாரப் பத்திரிகைகள்

6. ஆனந்த விகடன் — தமிழ்
7. கல்கி — ,,
8. குமுதம் — ,,
9. கல்கண்டு — ,,

## மாதப் பத்திரிகைகள்

10. நல்வழி — தமிழ்
11. ஆத்ம ஜோதி — ,,
12. தர்ம சக்கரம் — ,,
13. கலைமகள் — ,,
14. மஞ்சரி — ,,
15. நகரமலர் — ,,

# நாட்டுக்கோட்டை செட்டியார்களின்

# வர்த்தக சங்கம் சிங்கப்பூர்

## 47-ஙி. கிட்டங்கி

1 லெ. அ. அ. மு. இராமனுதன் செட்டியார்
2 சுப. நா. நாச்சியப்ப செட்டியார்
3 க. வெ. அ. அண்ணுமலே செட்டியார்
4 லெ. அ. மு. இராமநாதன் செட்டியார்
5 ராம. வீர. சித. சிதம்பரம் செட்டியார்
6 மு. ஆரி. கா. முத்தையா செட்டியார்
7 க. வீ. அள. ராம. ராம. இராமனுதன் செட்டியார்,
8 கரு. தெ. வேலாயுதஞ் செட்டியார்
9 கரு. வ. சிதம்பரம் செட்டியார்
10 அள. நா. நாராயணன் செட்டியார்
11 லெ. மா. தியாகராசன் செட்டியார்
12 பெ. சீ. ஸ்ரீனிவாசன் செட்டியார்
13 அரு. கண. பழநியப்ப செட்டியார்
14 வெ. லெ. வெங்கிடாசலம் செட்டியார்
15 சி. ராம. முப. சாத்தப்ப செட்டியார்
16 செ. ராம. ராம. பெ. இராமசாமி செட்டியார்
17 ராம. வெ. இராமனுதன் செட்டியார்
18 வெ. நா. அள. வைத்திலிங்கம் செட்டியார்
19 சு. நா. சு. நா. சிதம்பரம் செட்டியார்
20 ராம. மு. முத்தையா செட்டியார்
21 ப. சொ. நா. இராஜேந்திரன் செட்டியார்
22 சுப. சு. ராம. ராமநாதன் செட்டியார்
23 வெ. சித. அள. சிதம்பரம்

## 49-நி. கிட்டங்கி

24 பெரி. அ. மு. அண்ணமலை செட்டியார்
25 பெரி. கும. குமரப்ப செட்டியார்
26 ராம. வீர. ராமசாமி செட்டியார்
27 பெரி. வீர. வீரப்ப செட்டியார்
28 நா. அ. மெ. அண்ணமலை செட்டியார்
29 ராம. வீர. ராம. பழனியப்ப செட்டியார்
30 சா. சு. சீனிவாசன் செட்டியார்
31 ராம. வெ. சு. கும. குமரப்ப செட்டியார்
32 லெ. நா. சுப்பையா
33 சுப. லெ. நா. செல்லப்ப செட்டியார்
34 சித. லெ. அ. பழனியப்ப செட்டியார்
35 பெரி. லெ. நா. பெரிய கருப்பன் செட்டியார்
36 சி. ரா ராமனுதன் செட்டியார்
37 சொ. கரு. சொ. சிவப்பிரகாசம் செட்டியார்
38 சித. ராம. வயிரவன் செட்டியார்
39 அ. கண. தெ. அண்ணமலை செட்டியார்

## 54-நி. கிட்டங்கி

40 பெ. ப. வி பழ. ராமசாமி செட்டியார்
41 அரு. அண. நாச்சியப்ப செட்டியார்
42 கண. மா. வெ. வெள்ளையப்ப செட்டியார்
43 கண. மா. கண. கண்ணப்ப செட்டியார்
44 ராம. அரு. அருணசலம் செட்டியார்
45 பெ. ப. வி. அரு. ராம. முத்தப்ப செட்டியார்
46 வெ. ராம. வெ. ராமனுதன் செட்டியார்
47 செ. கண. பழநியப்ப செட்டியார்
48 அ. நா. சிதம்பரம் செட்டியார்
49 ராம. பெரி. பெரிய கருப்பன் செடடியார்
50 அ. மு. லெ. ஸ்ரீனிவாசன் செட்டியார்
51 ராம. செ. சுப்பிரமணியன் செட்டியார்
52 வெ. கண. கண்ணப்ப செட்டியார்

53 மெ. மெ. மெய்யப்ப செட்டியார்
54 ராம. ராம. இராமநாதன் செட்டியார்
55 அள.ச. அள. அழகப்ப செட்டியார்
56 மெ. கரு. மெ. மெய்யப்ப செட்டியார்
57 லெ. சிவ. கண. கண்ணப்ப செட்டியார்
58 கரு. சித. சிதம்பரம் செட்டியார்
59 அரு. அரு. அருணாசலம் செட்டியார்
60 நா. அ. அடைக்கப்ப செட்டியார்
61 பெ. ஆத. ராமசாமி செட்டியார்
62 கண. செ. கண. பழநியப்ப செட்டியார்
63 ராம. ஆரு. மெய்யப்ப செட்டியார்
64 சோம. சிவ. சிவசுப்பிரமணியம் செட்டியார்
65 க. கண. நா. சுப்பையா செட்டியார்

## 38-நி. கிட்டங்கி

66 அரு. சா. அரு. வள்ளியப்ப செட்டியார்
67 நா. பழ. பழனியப்ப செட்டியார்
68 பி. முரு. பிச்சப்ப செட்டியார்
69 பெரி. பெ. வயி. சண்முகம் செட்டியார்
70 முப. அ. சொ. கருப்பையா செட்டியார்
71 நா. சா. சாத்தப்ப செட்டியார்
72 வ. அரு. பழநியப்ப செட்டியார்
73 அ. அரு. சுப்பையா செட்டியார்
74 ராம. சுப. சிவானந்தம் செட்டியார்
75 நா. ராம. நா. மாணிக்கம் செட்டியார்
76 ராம கா. காசிவிஸ்வநாதன் செட்டியார்
77 பழ. க. நா. நாச்சியப்ப செட்டியார்
78 எ. செ. செல்லப்ப செட்டியார்
79 வயி. ராம. ப. பழ. பழநியப்ப செட்டியார்
80 பெரி. முப. முத்துப்பழனியப்ப செட்டியார்

# 36-ம். கிட்டங்கி

81 ராம. வீர. பெரி. பெரிய கருப்பன் செட்டியார்
82 நா. கரு. அ. அடைக்கப்ப செட்டியார்
83 பெரி. லெ. ராமசாமி செட்டியார்
84 கரு. ராம. ராமனுதன் செட்டியார்
85 லெ. வி. மெய்யப்ப செட்டியார்
86 பெ. பெ. பெத்தபெருமாள் செட்டியார்
87 சித. லெ. வள்ளியம்மை ஆச்சி
88 மெ. பழ. மெய்யப்ப செட்டியார்
89 ந. பழ. சித. மு. ந. பெரியகருப்பன் செட்டியார்
90 ந. பழ. சித. மு. வ. இராமனுதன் செட்டியார்
91 எ. நா. கா. கருப்பையா செட்டியார்
92 ராம. வெ. சு. கருப்பையா செட்டியார்
93 நா. ராம. சு. சுந்தரம் செட்டியார்
94 மு. மு. முத்தய்யா செட்டியார்
95 சோம. லெ. லெட்சுமணன் செட்டியார்
96 கரு. மு. கரு. கருப்பன் செட்டியார்
97 அண. அ. அண்ணுமலே செட்டியார்
98 கரு. பழ. பழநியப்ப செட்டியார்
99 மெ. பெ. மெ. பெரியகருப்பன் செட்டியார்
100 பெரி. ச. நா. சண்முகம் செட்டியார்
101 கரு. நாராயணன் செட்டியார்

102 மு. பெரி. கண்ணப்ப செட்டியார்
103 ராம. மெ. ராம. ராமசாமி செட்டியார்
104 அரு. நா. நாராயணன் செட்டியார்

உ

சிவமயம்

ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

# 46-வது ஆண்டு நிறைவு விழா நடவடிக்கை விபரம்

நாளது நள வருஷம் மாசி மீ 2 வக்கு ஆங்கிலம் 13.2.1977 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு 46வது ஆண்டு நிறைவு விழாவும், மகா சபைக் கூட்டமும் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் கொலு மண்டபத்தில் கூடியது. அவ்வமயம் அங்கத்தினர்களும், பல பிரமுகர்களும் வருகை தந்தனர் சிற்றுண்டிக்குப் பின் இறை வணக்கம் இனிமையாக பாடப் பெற்றது.

இம்மகா சபைக்கு திரு பெரி. அ.மு. ராமனாதன் செட்டியார் அவர்கள் தலைமை வகித்து முகவுரைப் பிரசங்கத்தைப் பேசினார்கள். அதன் சுருக்கம் அடியிற் தரப்பெற்றுள்ளது.

''அன்புடையீர், வணக்கம்! இன்று நம் சங்கத்திற்கு 46வது ஆண்டு நிறைவைக் கொண்டாட நாம் மகிழ்ச்சியுடன் இங்கு கூடியுள்ளோம். இவ்வளர்ச்சி நமக்கும் பெருமை தருவதாகும். இன்று நம் சங்கத்தின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 104 ஆகும்.

நம் சங்கத்தின் ஆண்டு நிறைவைக் கொண்டாடும்பொழுது நாம் கடந்த கால வளர்ச்சி நிலையை எண்ணிப் பார்த்தால் நம் எதிர்காலத்தை நன்கு அமைத்துக் கொள்ள நமக்குப் பெரிதும் துணை புரியும்.

சென்ற பல ஆண்டுகளாக நாம் தொழிலில் அத்தனை முன்னேற்றம் இல்லை என்பதை நாம் அறிவோம். குறிப்பாகச் சென்ற ஆண்டு நமக்கு சோதனைமிக்க ஆண்டாக அமைந்துவிட்டது. சிறிதும் எதிர்பாராதது என்று கூறுவதற்கில்லை.

உலகியல் பொருளியல் மந்தம். அரசாங்க சட்ட திட்டங்கள், பொருளகங்களும் (வங்கிகளும்) நிதி நிறுவனங்களும் இத்தொழிலை ஓரளவு செய்யத் தொடங்கியமை, வணிக மந்தம் ஆகிய பல காரணங்களால் நாம் நம் தொழிலை இனிது செய்து வரமுடியவில்லை. பொருளியல் மீட்சியடைந்து வளர்ந்தாலும், வாணிகம் பெருகினாலும் நாம் முன்னர் போல் இனியும் இத்தொழிலில் முன்னேற்றம் அடைதல் அத்தனை எளி

தன்று. இந்நிலையிலும் நாம் பிறதொழிலில் சிறிதும் ஈடுபடாது இதனையே தொடர்ந்து செய்தல் இனியும் நலம் பயப்பதாக அமையுமா என்பது ஐயமே.

மேலும் நம் தொழில் ஒரு புறம் தேக்கம் அடைந்ததோடு இனி நம் தொழில் செய்யும் இடமும் நமக்கு ஒரு பெரும் பிரச்னையாக அமைந்து விட்டது. இதுவரை நாம் குறிப்பிட்ட சில இடங்களில் ஒன்றாக இருந்து ஒவ்வொருவரும் தத்தம் தொழிலைக் கவனித்து வந்தோம். இனி இவ்வாறு ஒருங்கிருந்து தொழில் செய்ய முடியாத நிலை இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒன்றாக இருப்பதால் சில வசதிக் குறைவு இருந்திருப்பினும் பல நன்மைகளும் பாதுகாப்பும் இருந்தன. முக்கியமாக நடைமுறைச் செலவு குறைவாக இருந்தது. தொழிலை விரிவாக செய்யாவிட்டாலும் அடிப்படைச் செலவு குறைவாக இருந்தமையின் தொடர்ந்து சிறிய அளவிலேனும் தொழிலைச் செய்துவர முடிந்தது. இனிஇத்தகைய செலவு குறைந்த நிலையில் தொழிலைத் தொடர்ந்து செய்தல் என்பது அத்தனை எளிதாகத் தோன்றவில்லை.

இந்நிலையில் நாம் அனைவரும் இத்தொழில் ஒன்றினையே இனியும் முற்றாக நம்பியிருத்தல் அத்துணை சிறந்ததாகத் தோன்றவில்லை. ஆதலால் இந்நிலை மாற வேண்டும். இந்நிலையை முயன்று மாற்றியமைத்தல் வேண்டும். உடனடியாகப் பிற தொழிலில் முழுதும் விரிந்த அளவு ஈடுபடுதல் இயலாது. எனினும் இத்துறையில் நாம் கருத்தூன்றி செயலாற்ற வேண்டிய காலம் வந்து விட்டது. என்பதை மறந்துவிடுதல் கூடாது. வருமுன் காத்தலே வளமிக்க வாழ்வுக்கு வழிகோலும். வந்த பின்னரும் நாம் நம் எதிர்காலத்தைப் பற்றி கருத்து செலுத்தாதிருத்தல் கூடாது. ஆதலால் உறுப்பினர்கள் இதில் தீவிரமாகக் கருத்துச் செலுத்திக் காலம் கடந்து போகுமுன் ஆவன செய்தல் எதிர்கால வளமிக்க வாழ்வுக்கு ஆக்கம் அளிப்பது உறுதி.

நாம் எந்த நாட்டிற்கு சென்றாலும் அந்த நாட்டிற்கு முழு விசுவாசம் செலுத்தி வாழ்ந்து தொழில் செய்தல் நம் மரபு. அவ்வாறே இந்நாட்டில் நாம் செய்துவருகிறோம். இனியும் தொடர்ந்து நாம் இந்நாட்டிற்கும், நமக்கும் நலனும், புகழும் பயக்கும் வினைகளைச் செய்து வருவோம் என்பது உறுதி. இவ்வாண்டு ஒத்துழைத்த உறுப்பினர்கள், செயற்குழுவினர் ஏனையோருக்கும் மனமார்ந்த நன்றியைக்கூறி, நாடும் நாமும் சங்கமும் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வளமிக்க நல்வாழ்வு வாழ ஸ்ரீ தெண்டாயுதபாணி திருவருளை வழுத்துகிறேன் என்று கூறி அமர்ந்தார்கள்.

பின்னர் காரியதரிசியால் அறிக்கையும், கணக்கும் சென்ற நிர்வாக சபை நிகழ்ச்சிகளையும், சங்கத்திற்கு வந்த கடிதங்களையும் வாழ்த்துச் செய்திகளையும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

இதன் பின்னர் 54நிர் கிட்டங்கி திரு. அரு. அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் தம் சொற்பொழிவை ஆரம்பித்து நகரத்தார்கள் நகரத்தார் மாணவ மாணவிகளுக்கு உபகாரச் சம்பளம், கல்யாணத் திற்கு நன்கொடைகள், அறப்பணிக் கழகத்தின் மூலம் தாராளமாக வழங்கி வருவதைப் பாராட்டி, இந்நாட்டு நகரத்தார் மாணவ மாணவிகளுக்கும் கல்விக்காக உபகாரச் சம்பளம் தாராளமாக அளிக்க வேண்டுமென்றும், சீன மொழி அறிவியல் நம்மவர்களுக்கு நலம் தேடித் தர வாய்ப்பு ஏற்படுமென்றும், வெளியிலுள்ள நகரத்தார்களை நம் சங்கத்தின் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் நகரத்தார்களின் பெயரும் புகழும் என்றும் இந்நாட்டில் நிலைத்திருக்கும் வகையில் ஏதேனும் ஒன்றை நகரத்தார்களின் நினைவாக செய்ய வேண்டுமென்றும் நகரத்தார்கள் ஆவன செய்வார்கள் என்று தான் நம்புவதாகவும் இனிமையாகவும் சுருக்கமாகவும் கூறி அமர்ந்தார்கள்

இது முடிய புத்தாண்டு நிர்வாக சங்க அங்கத்தினர்களின் பெயர்களை திரு. வெ. ராம. வெ. ராமனுதன் செட்டியார் அவர்கள் முன் மொழிய அதை திரு. ராம. வீர. ராம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் ஆமோதிக்க இம்மகா சபையின் தீர்மானப்படி அடியிற் கண்டவர்களை சங்க உத்தியோகஸ்தர்களாகவும் நிர்வாக சபை அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

## தலைவர்

திரு. மெ. பெ. மெ. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள்

## உப-தலைவர்

திரு. பெரி. அ. மு. ராமனுதன் செட்டியார் அவர்கள்

## காரியதரிசி

திரு. அரு. சா. அரு. முத்து பழனியப்ப செட்டியார் அவர்கள்

## உப-காரியதரிசி

திரு. மெ. கரு. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள்

## பொக்கிஷதார்

திரு சுப. நா நாச்சியப்ப செட்டியார் அவர்கள்

## நிர்வாக சபை அங்கத்தினர்கள்

திரு. ராம. வீர. பெரி. ராமசாமி செட்டியார் அவர்கள்
திரு. ராம. வெ சு. கருப்பையா செட்டியார் அவர்கள்
திரு சுப. சு ராம. ராமனுதன் செட்டியார் அவர்கள்
திரு. பெரி. வீர. வீரப்ப செட்டியார் அவர்கள்
திரு சி. ரா. ராமனுதன் செட்டியார் அவர்கள்
திரு. அ மு லெ. சீனிவாசன் செட்டியார் அவர்கள்
திரு. நா சா. சாத்தப்ப செட்டியார் அவர்கள்

கணக்கு பரிசோதகராக திரு. கரு. பழ பழனியப்ப செட்டியார் அவர்களை நியமிக்கப்பெற்றது.

இதன் பின் இம்மகா சபைத் தலைவர் திரு. பெரி. அ. மு ராமனுதன் செட்டியார் அவர்கள் தனது முடிவுரையில் புத்தாண்டு நிர்வாக சபையினரையும், உத்தியோகஸ்தர்களையும் வரவேற்று புத்தாண்டு தலைவருக்கு ஒத்துழைப்பையும், ஆதரவையும் அளித்துதவக் கேட்டுக்கொண்டு அமர்ந்தார்கள்.

இதுமுடிய புத்தாண்டுத் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் புத்தாண்டு நிர்வாக சபை அங்கத்தினர்களையும். உத்தியோகஸ்தர்களையும் வரவேற்று தனது அலுவல்களைச் செவ்வனே முடித்துத்தர தனக்கு ஒத்துழைப்பையும் ஆதரவையும் அளித்துதவக் கேட்டுக் கொண்டு அமர்ந்தார்கள்.

இதன் பின்னர் புத்தாண்டு காரியதரிசி திரு. அரு. சா. அரு. முத்துப் பழனியப்ப செட்டியார் அவர்கள் புத்தாண்டு நிர்வாக சபை அங்கத்தினர்களையும் உத்தியோகஸ்தர்களையும் வரவேற்று தனது அலுவல்களை செவ்வனே முடித்துத்தர தனக்கு ஒத்துழைப்பையும் ஆதரவையும் அளித்துதவக் கேட்டுக் கொண்டு அமர்ந்தார்கள்.

இந்தியன் ஓவர் சீஸ் வங்கியில் கணக்கு, வரவு, செலவு, செக் சமால் செய்து வரவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

காலம்சென்ற இந்திய அதிபர் அவர்களின் மரணம் குறித்து அனுதாபம் தெரிவித்து, அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபச் செய்தியனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

பின்னர் மாஜிக் காரியதரிசி ஏனையோருக்கும் நன்றி கூறி கூட்டம் 5-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

உ

சிவமயம்

**ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை**

# 47-வது ஆண்டு 1-வது

# நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது நளஷூ மாசிமீ 30உக்கு ஆங்கிலம் 13-3-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப் பெற்றது.

1. கூட்டத்திற்கு 11 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.
2. 46வது ஆண்டு விழா, மகா சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.
3. கணக்குகள் 14-1-77 முதல் 9-3-77 வரை வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.
4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும், அவற்றிற்கு நம் பதில்களும், வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.
5. 38 நிர் கிட்டங்கி திரு. அரு. மு. அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் தனது சங்க உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்து எழுதிய கடிதம் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெறவே அன்னாருக்கு எழுதுவதெனத் தீர்மானிக்கப் பெற்றது.

பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப் பெற்று கூட்டம் 5-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

# 47 வது ஆண்டு 2-வது

## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது நளஷூ பங்குனிமீ 28உக்கு ஆங்கிலம் 10-4-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப் பெற்றது.

1. கூட்டத்திற்கு 11 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்

2. 47–வது ஆண்டு 1-வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

3. கணக்குகள் 14–3–77 முதல் 22-3-77 வரை வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன. பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப் பெற்று கூட்டம் 5 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47-வது ஆண்டு 3-வது
## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஸு சித்திரைமீ 26உக்கு ஆங்கிலம் 8-5 77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது.

1. கூட்டத்திற்து 11 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.

2. 47-வது ஆண்டு 2-வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

3. கணக்குகள் 18-4-77 முதல் 27-4-77 வரை வாசித்துக் காண்பிக்கப்பெற்றுஅங்கீகரிக்கப்பெற்றன.

4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

5. 36 நிம் கிட்டங்கி ப்ரோவன் அண்டு கம்பெனி மானேஜிங் பார்ட்னர் திரு. கரு. நாராயணன் செட்டியார் அவர்கள் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர விரும்பி அனுப்பிய விண்ணப்பம் வாசித்துக் காண்பிக்கப் பெற்று விதிமுறை 11. ஆ. பிரிவின்படி அங்கீகரிக்கப் பெருததால் அன்னருக்கு எழுதுவதெனத் தீர்மானிக்கப் பெற்றது.

பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப் பெற்று கூட்டம் 5-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 4வது

## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஹூ வைகாசிமீ 30வக்கு ஆங்கிலம் 12-6-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப் பெற்றது.

1. கூட்டத்திற்கு 11 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.
2. 47-வது ஆண்டு 3 வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.
3. கணக்குகள் 13-5-77 முதல் 11-6-77 வரை வாசித்துக் காண்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.
4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.
5. சிங்கப்பூர் பாய்ஸ்டவுன் பள்ளிக்கு $ 25ம், சால்வேஷன் ஆர்மிக்கு $ 25ம் நன்கொடை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் 5-40 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 5வது

## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஹூ ஆனிமீ 26வக்கு ஆங்கிலம் 10-7-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க கட்டிடத்தில் தலைவர் மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப் பெற்றது.

1. கூட்டத்திற்கு 10 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.
2. 47-வது ஆண்டு 4 வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.
3. கணக்குகள் 14 6-77 முதல் 9-7-77 வரை வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

5. சிங்கப்பூர் தேசியதினக் கொண்டாட்டத்திற்கு $ 100ம், பார்வையற்றோர் சங்கத்திற்கு $ 25ம் நன்கொடை வழங்குவதென்று தீர்மானிக்கப் பெற்றது.

பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் 5-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 1வது

## விசேஷ நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஹு ஆடிமீ 24வக்கு ஆங்கிலம் 8-8-77 திங்கட்கிழமை இரவு 8-30 மணிக்கு நடந்த விசேஷ நிர்வாக சபைக் கூட்டத்தில் 38நிம் கிட்டங்கி திரு. அரு. சா. அரு. முத்துபழனியப்ப செட்டியார் அவர்கள் தமிழகம் சென்றிருப்பதை முன்னிட்டு தனது நிர்வாகசபை அங்கத்தினர் பதவியையும், காரியதரிசி பதவியையும் ராஜினமா செய்து வந்த கடிதம் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெறவே அன்னாருக்குப் பதிலாக ஷெகிட்டங்கி திரு. பி. முரு. பிச்சப்ப செட்டியார் அவர்களை நிர்வாகசபை அங்கத்தினராகவும், காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பெறவே அன்னாருக்கு எழுதுவதெனத் தீர்மானிக்கப் பெற்றது.

கூட்டத்திற்கு 9 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.

## 47வது ஆண்டு 6வது

## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஹு ஆடிமீ 30வக்கு ஆங்கிலம் 14-8-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது.

1. கூட்டத்திற்கு 10 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.

2. 47 வது ஆண்டு 5-வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகளும் 1 வது விசேஷ நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகளும் வாசித்து காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.

3. கணக்குகள் 13-7 77 முதல் 19-7-77 வரை வாசித்து காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன

4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன. பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் 5 40 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 7வது

## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஹூ ஆவணிமீ 26வுக்கு ஆங்கிலம் 11-9-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப் பெற்றது.

1. கூட்டத்திற்கு 10 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.

2. 47வது ஆண்டு 6வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்து காண்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

3. கணக்குகள் 18-8-77 முதல் 10-9-77 வரை வாசித்து காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

4. சங்கத்திற்கு வந்த கடிகங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்து காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

5. சங்கத்தின் சட்ட விதிகளின் 11வது ஷரத்தின் (ஓ) பிரிவின் படி சங்க உறுப்பினரான திரு. பெரி. வீர. வீரப்ப செட்டியார் அவர்கள் தொடர்ந்து மூன்று செயற்குழுக் கூட்டங்களுக்கு வராதிருந்ததால் அன்னாரின் பெயர் செயற்குழு உறுப்பினர் பட்டியலிலிருந்து அகற்றப்பட வேண்டியதை ஆமோதித்து தீர்மானம் நிறைவேற்றப்படவே அன்னாருக்கு எழுதுவதெனத் தீர்மானிக்கப் பெற்றது. பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் 5-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 2வது

## விசேஷ நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஹூ புரட்டாசிமீ 15வுக்கு ஆங்கிலம் 1-10-77 சனிக்கிழமை இரவு 8-30 மணிக்கு நடந்த விசேஷ நிர்வாக சபைக் கூட்டத்தில் 49நிர் கிட்டங்கி திரு. பெரி. வீர. வீரப்ப செட்டியார்

அவர்கள் நிர்வாக சபை அங்கத்தினர் பதவியிலிருந்து அகற்றப் பெற்றதால் அன்னாருக்கு பதிலாக ஷகிட்டங்கி திரு. ராம. வீர. ராம. பழனியப்ப செட்டியார் அவர்களை நிர்வாக சபை அங்கத்தினராக தேர்ந்தெடுக்க பெறவே அன்னாருக்கு எழுதுவதென தீர்மானிக்கப் பெற்றது.

கூட்டத்திற்கு 10 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.

## 47வது ஆண்டு 8வது
## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்கள ஹூ புரட்டாசி மீ 23க்கு ஆங்கிலம் 9-10-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரியகருப்ன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது.

1. கூட்டத்திற்கு 12 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.
2. 47வது ஆண்டு 7வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகளும், 47வது ஆண்டு 2வது விசேஷ நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகளும் வாசித்துத் காண்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.
3. கணக்குகள் 12-9-77 முதல் 8-10-77 வரை வாசித்துக் காண்பிக்கப்பெற்று அங்கிகரிக்கப்பெற்றன.
4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெ்றன.
5. 49 நிர் இட்டங்கி திரு. சித. பெரி திட்டாணி செட்டியார் அவர்கள் சங்க உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து எழுதியனுப்பிய கடிதம் வாசித்துக் காண்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெறவே அன்னாருக்கு எழுதுவதெனத் தீர்மானிககப்பெற்றது.

பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் 5-20 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 9வது
## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்கள ஹூ ஐப்பசி மீ 28உக்கு ஆங்கிலம் 13-11-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது.

1. கூட்டத்திற்கு 9 அங்கத்தினர்கள் வருகைதந்தனர்.

2. 47வது ஆண்டு 8வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்துக்காண்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.

3. கணக்குகள் 10-10-77 முதல் 12 11-77 வரை வாசித்துக் காண்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.

4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு, நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.
பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் 5-மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 3வது

## விசேஷ நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்கள ஞு கார்த்திகை மீ 6வக்கு ஆங்கிலம் 21-11-77 திங்கட்கிழமை இரவு 8-30 மணிக்கு நடந்த விசேஷ நிர்வாக சபைக் கூட்டத்தில் தமிழ் நாட்டு வெள்ள நிவாரண நிதிக்கு தமிழ் நாடு முதலமைச்சருக்கு ரூபாய் 5001 நன்கொடை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பெற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு 8 அங்கத்தினர்கள் வருகைதந்தனர்.

## 47வது ஆண்டு 10வது

## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஞு கார்த்திகைமீ 19வக்கு ஆங்கிலம் 4-12-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப் பெற்றது.

1. கூட்டத்திற்கு 8 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.

2. சென்ற 47வது ஆண்டு 9வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகளும், 47வது ஆண்டு 3வது விசேஷ நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகளும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

3. கணக்குகள் 20-11-77 முதல் 3-12-77 வரை வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.

4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும், அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.

5. 36நிர் கிட்டங்கி திரு. பெரி. ச. நா. சண்முகம் செட்டியார் அவர்கள் நம் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர விரும்பி அனுப்பியிருந்த விண்ணப்பம் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெறவே அன்னாருக்கு எழுதுவதெனத் தீர்மானிக்கப் பெற்றது.

பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப் பெற்று கூட்டம் 5-40 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 11வது
## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஹு மார்கழிமீ 3உக்கு ஆங்கிலம் 18-12-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப் பெற்றது.

1. கூட்டத்திற்கு 8 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.
2. 47வது ஆண்டு 10வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்து காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.
3. கணக்குகள் 5-12-77 வரை வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.
4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெற்றன.
5. 36 நிர் கிட்டங்கி திரு. கரு. நாராயணன் செட்டியார் அவர்கள் நம் சங்கத்தில் அங்கத்தினராக சேர விரும்பி அனுப்பியிருந்த விண்ணப்பம் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப் பெறவே அன்னாருக்கு எழுதுவதெனத் தீர்மானிக்கப்பெற்றது.

பின்னர் உதவி காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் 5-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 47வது ஆண்டு 12வது
## நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள்

நாளது பிங்களஹு மார்கழிமீ 24உக்கு ஆங்கிலம் 8-1-78 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது.

1. கூட்டத்திற்கு 9 அங்கத்தினர்கள் வருகை தந்தனர்.

2. 47வது ஆண்டு 11வது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்ச்சிகள் வாசித்து காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.

3. கணக்குகள் 19-12-77 முதல் 31-12-77 வரை வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.

4. சங்கத்திற்கு வந்த கடிதங்களும் அவற்றிற்கு நம் பதில்களும் வாசித்துக் காண்பிக்கப் பெற்று அங்கீகரிக்கப்பெற்றன.

5. நாளது பிங்கள஖ூ தைமீ 23உக்கு ஆங்கிலம் 5-2-78 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் கொலு மண்டபத்தில் சங்கத்தின் 47வது ஆண்டு நிறைவு விழாவையும், மகா சபைக் கூட்டத்தையும் நடத்துவதென்றும் கணக்குகள் 31-12-77 வரை முடித்து ஐந்துகை விபரத்துடன் அறிக்கை வெளியிட்டு அங்கத்தினர்களுக்குக் கொடுப்பதென்றும் அப்பொழுது சிற்றுண்டி வழங்குவதென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப் பெற்று கூட்டம் 5-40 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

## 1-1-1977 முதல் 31-12-1977 வரை உள்ள வரவு செலவு கணக்கு

| வரவு | $ cts. | செலவு | $ cts |
|---|---|---|---|
| கெஜட் சந்தா ரீபண்டு வரவு | 2.10 | பத்திரிகைகளும், கெஜட்டும் | 510.15 |
| பிரவேசக் கட்டணம் வரவு | 10.00 | அச்சுக்கூலி | 515.00 |
| அங்கத்தினர் சந்தா கணக்கு வரவு | 1,280.00 | வாடகை | 300.00 |
| அதிகப்பற்று | 584.38 | மின்சாரம், தண்ணீர் P.U.B. வசம் | 100.58 |
| | | ஆண்டு விழாச்சிலவு | 167.05 |
| | | நன்கொடை | 175.00 |
| | | தீபாவளிச் செலவு | 11.50 |
| | | காடிச் செலவு | 16.90 |
| | | தபால் செலவு | 24.40 |
| | | சில்லரைச் செலவு | 55.90 |
| ஆக மொத்தம் | 1,876.48 | ஆக மொத்தம் | 1,876.48 |

## நாட்டுக்கோட்டை செட்டியார்களின் வர்த்தக சங்கம், சிங்கப்பூர்
## 1977ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31உ வரை ஐந்துகை கணக்கு விபரம்

| வரவு தொகை | $ cts. | பற்று தொகை | | $ cts. |
|---|---|---|---|---|
| நகரத்தார்கள் வரவு | 31,176.80 | இந்தியன் ஓவர்சீஸ் பேங் பற்று | | 577.85 |
| கோலாலம்பூர் சொந்த தோட்டக்காரர் சங்கம் வரவு | 23.21 | சாமான் கொள்முதல் பற்று | 415.50 | |
| | | " இவ்வருடம் | 54.00 | 469.50 |
| | | லாப நஷ்டக் கணக்கு | 29,489.67 | |
| | | " இவ்வருடம் | 584.38 | 30,074.05 |
| | | ரொக்க இருப்பு | | 78.61 |
| ஆக மொத்தம் | 31,200.01 | ஆக மொத்தம் | | 31,200.01 |

குறிப்பு:- சிட்டை, பேரேடு, வவுச்சர்கள் தணிக்கை செய்தேன். கணக்குகள் சரியாக வைக்கப்பெற்றுள்ளன.

**கரு. பழ. பழநியப்ப செட்டியார்**
கணக்குப் பரிசோதகர்.

**பி. முரு. பிச்சப்ப செட்டியார்**
கௌரவ காரியதரிசி.

# முடிவுரை

நம் சங்கத்தின் 47–வது ஆண்டு நிகழ்ச்சிகளை இவ்வறிக்கையின் மூலம் தங்கள் முன் சமர்ப்பித்துள்ளேன்.

சென்ற ஆண்டு சங்கத்தின் அலுவல்களை செவ்வனே நடைபெற

எனக்கு நல்லுதவி செய்த தலைவரவர்களுக்கும், நிர்வாக சபை அங்கத்தினர்களுக்கும், சொற்பொழிவு நிகழ்த்திய பெரியோர்களுக்கும், இன்றைய ஆண்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பி. முரு. பிச்சப்ப செட்டியார்**
கௌரவ காரியதரிசி.

Chettiars' Temple Society Singapore

உ
சிவமயம்

## ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

# வருகை தந்த பெருமக்கள்

1. சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் திரு. **T. M. S.** மகாதேவன் அவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து தனது வருகை தனக்கு கிடைத்தது பெரும் பாக்கியம் என்றும், நகரத்தார்கள், பக்தி திறமையுடனும் கோவிலை நிர்வகித்து, தெய்வீகத்தை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறிச் சென்றார்கள்.

2. தமிழகத்திலிருந்து வருகை தந்த புகழ்மிகு இசைக்கலைஞர் பத்மஸ்ரீ மதுரை திரு. சோமு அவர்கள் ஆலயத்திற்கு வருகை புரிந்து நகரத்தாரில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ தெண்டாயுதபாணிக் கடவுளைக் கண்டு உளமகிழ்ந்ததாயும், சன்னதியில் பக்தி ததும்பி வழிகின்றது என்றும், ஆலய நிர்வாகமும், வரவேற்பும் நல்லமுறையில் நடக்கிறதென்றும் புகழ்ந்துரைத்துச் சென்றார்கள்.

3. இலங்கை கலையகத்தைச் சேர்ந்த கலைவாணர் வில்லடைக்குழுத் தலைவர் திரு. கணபதி சின்னமணி அவர்கள் தன் குழுவினருடன் நமது கோவிலில் ''அருணகிரிநாதரின்'' வரலாற்றை தமது வில்லிசையில் பாடியதுடன் இங்கு நகரத்தார் கோவிலில் அம்மை அப்பனுடன் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீ தெண்டாயுதபாணியின் சன்னிதானத்தில் மேற்படி நிகழ்ச்சியை நடத்தும் பேற்றினை பெற்றதாயும், நகரத்தார்கள் இவ்வாலயத்தை நிர்வகிக்கும் சிறப்பைக் கண்டு மிக மகிழ்ந்ததாயும், அப்பன் அன்னவர் எல்லோருக்கும் நல்லருள் செய்ய வேண்டுகிறோம் என்று கூறிச் சென்றார்கள்.

4. யாழ்ப்பாணம் நல்லூர் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் அவர்கள் கோவிலுக்கு விஜயம் செய்து ''கந்தபுராண'' உபந்யாசங்கள் நிகழ்த்தியதுடன், ஆலயத்தின் புனிதத்தன்மை, அலங்காரச் சிறப்பு அத்தனையும் உள்ளத்தை கவர்ந்தது என்றும் அருள் செல்வர்களாகிய நகரத்தாரின் அறச்செயல்கள் வாழ்க என்றும் வாழ்த்துரைத்துச் சென்றார்கள்.

5. தமிழ்நாடு திருக்கோவிலூரைச் சேர்ந்த ஸ்வாமி ஹரிதாஸ்ஜி அவர்கள் கோவிலுக்கு விஜயம் செய்து ''முருகன் பெருமை'' என்னும் தலைப்பில் உபந்யாசம் செய்து அருள்பெறுக என்று வாழ்த்திச் சென்றார்கள்.

6. தமிழ்நாடு சென்னை தமிழ்பணி ஆசிரியர் புலவர் பா. மு. சேது ராமன் அவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து ''திருவாசகத்தேன்'' எனும் பொருள்பற்றி உரை நிகழ்த்திச் சென்றார்கள்.

7. மற்றும் தமிழகத்து படாதிபர் திரு. ஏ. வி மெய்யப்ப செட்டியார் அவர்களும் ஆலயத்திற்கு வருகை தந்தார்கள்.

---

உ

சிவமயம்

## ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

# நன்கொடை

சிங்கப்பூர் பாய்ஸ் டவுனுக்கு $ 25ம், சால்வேஷன் ஆர்மிக்கு $ 25ம், சிங்கப்பூர் தேசிய தின கொண்டாட்டத்திற்கு $ 100ம், பார்வையற்றோர் சங்கத்திற்கு $ 25ம், தமிழ்நாட்டு வெள்ள நிவாரண நிதிக்கு ரூ 5001ம் அனுப்பிவைக்கப்பட்டது.

Chettiars' Temple Society Singapore

# சங்கத்தின் மாஜி உத்தியோகஸ்தர்கள

## 1-வது வருடம் (1931)

தலைவர்: சா. ராம. மு. அ. நாச்சியப்ப செட்டியார்
காரியதரிசி: அரு. அண்ணாமலை செட்டியார் (தீ. சொ.)

## 2-வது வருடம் (1932)

தலைவர்: செ. சித. அருணாசலம் செட்டியார்
உப-தலைவர்: அரு. சா. அரு. நாராயணன் செட்டியார்
காரியதரிசி: ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார்
பெ. ப. வி. பழ. கண்ணப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: தீ. சொ. தீ. சொ. சொக்கலிங்கம் செட்டியார்

## 3-வது வருடம் (1933)

தலைவர்: சுப. க. அ. மாணிக்கஞ் செட்டியார்
உப-தலைவர்: ஆத. கு. பழ. மு. இராமசாமி செட்டியார்
காரியதரிசி: அரு. சா. அரு. நாராயணஞ் செட்டியார்
உதவி-காரியதரிசி பெரி. நாக. பெரி. நாச்சியப்ப செட்டியார்

## 4-வது வருடம் (1934)

தலைவர்: அரு. சா. அரு. நாராயணன் செட்டியார்
உப-தலைவர்: ராம. நா. நடராஜன் செட்டியார்
காரியதரிசி: சுப. சு. அண. பழனியப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: தெ. சி. நா சுப. சிவலிங்கம் செட்டியார்

## 5-வது வருடம் (1935)

தலைவர்: பெரி. பெ. நா. நாச்சியப்ப செட்டியார்
உப-தலைவர்: ந. பழ. சித. இராமநாதன் செட்டியார்
காரியதரிசி: ஆரு. ஆ. ராம. அண்ணாமலை செட்டியார்
உதவி-காரியதரிசி: செ. சித. செல்லப்ப செட்டியார்

## 6-வது வருடம் (1936)

தலைவர்: சித. அ. சித. சிதம்பரம் செட்டியார்
உப-தலைவர்: மெ. செ. மெ. ச. செட்டியப்ப செட்டியார்
காரியதரிசி: ராம. நா. சாத்தப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: வி. சா. காசிச் செட்டியார்

### 7 வது வருடம் (1937)

தலைவர்: மு. அரு. நாராயணஞ் செட்டியார்
உப-தலைவர்: பெரி. பெ. நா. நாச்சியப்ப செட்டியார்
காரியதரிசி: முத்து. கரு. அரு. கரு. செல்லப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: வெ. வீர. நா. அரு. சுப்பையா செட்டியார்

### 8-வது வருடம் (1938)

தலைவர்: ந. பழ. சித. அழகப்ப செட்டியார்
உப-தலைவர்: பெரி. முப. பெரியகருப்பஞ் செட்டியார்
காரியதரிசி: சொ. மு. அ. மெ. அரு. அழகப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: ஆரு. ஆ. ராம. நாச்சியப்ப செட்டியார்

### 9-வது வருடம் (1939)

தலைவர்: லெ. அ. அ. அண. நாகப்ப செட்டியார்
உப-தலைவர்: பெரி. நா. நா. அழகப்ப செட்டியார்
காரியதரிசி: மு. ஆரி. காசிவிஸ்வநாதன் செட்டியார்
உதவி-காரியதரிசி: ராம. நா. வேலாயுதஞ் செட்டியார்

### 10-வது வருடம் (1940)

தலைவர்: ஆத. கு. பழ. மு. மெய்யப்ப செட்டியார்
உப-தலைவர்: சுப. க. அ. ஷண்முகஞ் செட்டியார்
காரியதரிசி: ஆரு. ஆ. ராம. நாச்சியப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: கண. நா. நா. கண. சீனிவாசன் செட்டியார்

### 11-வது வருடம் (1941)

தலைவர்: பெரி. நா. நா. முத்துகருப்பஞ் செட்டியார்
உப-தலைவர்: லெ. அ. அ. நா. மு. மெய்யப்ப செட்டியார்
காரியதரிசி: சி. மு. அரு. நா. வெங்கிடாசலம் செட்டியார்
உதவி-காரியதரிசி: சு. முரு. கோவிந்தஞ் செட்டியார்

## ஜப்பான் ஆட்சிக்குப் பிறகு

### 16-வது வருடம் (1946)

தலைவர்: மெய. மெ. மலையாண்டி செட்டியார்
உப-தலைவர்: ராம. அழ. பெரியகருப்பஞ் செட்டியார்
காரியதரிசி: முத்து. கரு. அரு. கரு. அரு. செல்லப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: பெரி. பெ. வயி. ஷண்முகம் செட்டியார்

## 17-வது வருடம் (1947)

தலைவர்: க. வெ. அ. காசிவிஸ்வநாதன் செட்டியார்
உப-தலைவர். முத்து. கரு. அரு. கரு. அரு. சொக்கலிங்கம் செட்டியார்
காரியதரிசி: பெரி. நா. நா. ஏகப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: மு. சிவ. மெ. லெ. கணேசன் செட்டியார்

## 18 வது வருடம் (1948)

தலைவர்: முத்து. கரு. அரு. கரு. அரு. சொக்கலிங்கம் செட்டியார்
உப-தலைவர்: ஆத. கு. பழ. மு. கருப்பன் செட்டியார்
காரியதரிசி: மு. பெ. மெ. சே. சுப்பையா செட்டியார்
உதவி-காரியதரிசி: மு. அரு. முத்தையா செட்டியார்

## 19-வது வடரும் (1949)

தலைவர்: ஆரு. ஆ. ராம. சொ. ராமையா செட்டியார்
உப-தலைவர்: க. வீ. அழ. ராம. ராம. முத்தையா செட்டியார்
காரியதரிசி, சிவ. சிங்கார செட்டியார்
உதவி-காரியதரிசி: பெரி. பெ. நா. சுந்தரம் செட்டியார்

## 20 வது வருடம் (1950)

தலைவர்: லெ. அ. மு. பொற்கொடியான் செட்டியார்
உப-தலைவர்: அரு. அரு. மெய்யப்ப செட்டியார்
காரியதரிசி: பெரி. பெ. வயி. ஷண்முகம் செட்டியார், ஜே. பி.
உதவி-காரியதரிசி: மு. சிவ. மெ. லெ. கணேசன் செட்டியார்

## 21 வது வருடம் (1951)

தலைவர்: அரு. சா. அரு. அண்ணாமலை செட்டியார்
உப-தலைவர்: மெ. பழ. மலையாண்டி செட்டியார்
காரியதரிசி: பெ. ப. வி. பழ. விருத்தகிரி செட்டியார்
உதவி-காரியதரிசி: சொ. நா. சொ. நாச்சியப்ப செட்டியார்

## 22 வது வருடம் (1952)

தலைவர்: அரு. அரு. அருணாசலம் செட்டியார்
உப-தலைவர்: மெ. பழ. மலையாண்டி செட்டியார்
காரியதரிசி: சுப. நா. கரு. கருப்பையா செட்டியார்
உதவி-காரியதரிசி: வயி. ராம. ப. காசிவிஸ்வநாதன் செட்டியார்

## 23-வது வருடம் (1953)

தலைவர்: பெரி. அ. மு. வெள்ளையப்ப செட்டியார்
உப-தலைவர்: பழ. க. நா. கருப்பஞ் செட்டியார்
காரியதரிசி: மு. சிவ. மெ. லெ. வினைதீர்த்தான் செட்டியார்
உதவி-காரியதரிசி: லெ. அ. அ. நா. மு. பெரியகருப்பஞ் செட்டியார்

## 24-வது வருடம் (1954)

தலைவர்: ந. பழ. சித. மு. வ. நடராஜன் செட்டியார்
உப-தலைவர்: கண. மா. வெள்ளையப்ப செட்டியார்
காரியதரிசி: முத்து. கரு. அரு. பழ. வெ. செல்லப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி சு. முரு. நாகப்ப செட்டியார்

## 25-வது வருடம் (1955)

தலைவர்: முத்து. கரு. அரு. பழ. வெ. செல்லப்ப செட்டியார்
உப-தலைவர்: மெ. பழ. மலையாண்டி செட்டியார்
காரியதரிசி: பெரி. அ. மு. மாணிக்கம் செட்டியார்
உதவி-காரியதரிசி: வ. சுப. நாச்சியப்ப செட்டியார்

## 26-வது வருடம் (1956)

தலைவர்: பெரி. அ. மு. மாணிக்கம் செட்டியார்
உப-தலைவர்: அரு. அரு. கருப்பன் செட்டியார்
காரியதரிசி: பெரி. ராம. பழ. காசிவிஸ்வநாதன் செட்டியார்
உதவி-காரியதரிசி: கரு. தெ. வேலாயுதம் செட்டியார்

## 27-வது வருடம் (1957)

தலைவர்: அ. அரு. சொக்கலிங்கம் செட்டியார்
உப-தலைவர்: மெ. பெ. மு. மெய்யப்ப செட்டியார்
காரியதரிசி: க. வெ. அ. சோமசுந்தரம் செட்டியார்
உதவி-காரியதரிசி: அரு. பழ. அருணாசலம் செட்டியார்

## 28-வது வருடம் (1958)

தலைவர்: லெ. அ. அ. நா. மு. சுவாமிநாதன் செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. வெள்ளையப்ப செட்டியார்
காரியதரிசி: சு. முரு. நாகப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: மு. சே. சுப. சுப்பையா செட்டியார்

## 29-வது வருடம் (1959)

தலைவர்: அரு. சா. அரு. கருப்பன் செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. வெள்ளையப்ப செட்டியார்
காரியதரிசி: பெ. ப. வி. பழ. விருத்தகிரி செட்டியார்
உதவி-காரியதரிசி: லெ. அ. அ. நா. மு. அழகப்ப செட்டியார்

## 30-வது வருடம் (1960)

தலைவர்: ராம. அரு. அருணாசலம் செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. வெள்ளையப்ப செட்டியார்
காரியதரிசி: மு. சே. சுப. சுப்பையா செட்டியார்
உதவி-காரியதரிசி: பெரி. பெ. நா. சு. திருநாவுக்கரசு செட்டியார்

## 31-வது வருடம் (1961)

தலைவர்: மெ. பெ. மு. பெரியகருப்பன் செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. வெள்ளையப்ப செட்டியார்
காரியதரிசி: அரு. மு. அரு. அருணாசலம் செட்டியார்
உதவி-காரியதரிசி: க. வெ. அ. சோமசுந்தரம் செட்டியார

## 32-வது வருடம் (1962)

தலைவர்: அரு. சா. அரு. ஷண்முகம் செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. கருப்பன் செட்டியார்
காரியதரிசி: லெ. வி. வினைதீத்தான் செட்டியார்
உதவி-காரியதரிசி: வ. அரு. நாராயணன் செட்டியார்

## 33-வது வருடம் (1963)

தலைவர்: ந. பழ. சித. மு. வ. அருணாசலம் செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. கருப்பன் செட்டியார்
காரியதரிசி: கண. மா. கண்ணப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: மு. ப. அ. சொ. அண்ணாமலை செட்டியார்

## 34-வது வருடம் (1964)

தலைவர்: கண. மா. கண்ணப்ப செட்டியார்
உப-தலைவர்: முத்து. கரு. அரு. பழ. வெ. செல்லப்ப செட்டியார்
காரியதரிசி: சுப. நா. கரு. நாச்சியப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: சுப. நா. ராமனாதன் செட்டியார்

## 35-வது வருடம் (1965)

தலைவர்: பெரி. அ. மு. கருப்பன் செட்டியார்
உப-தலைவர்: மெ. பெ. மெ. பெரியகருப்பன் செட்டியார்
காரியதரிசி: அள. சுப. சுப்பையா செட்டியார்
உதவி-காரியதரிசி: பெரி. பெ. நா. சு. சுந்தரம் செட்டியார்

## 36-வது வருடம் (1966)

தலைவர்: சுப. நா. ராமனுதன் செட்டியார்
உப-தலைவர்: அரு. சி. கா. காசிவிஸ்வநாதன் செட்டியார்
காரியதரிசி: வயி. ராம. ப. பழ. பழநியப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: செ. கண. பழநியப்ப செட்டியார்

## 37-வது வருடம் (1967)

தலைவர்: முத்து. கரு. அரு. பழ. வெ. செல்லப்ப செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. ராமனுதன் செட்டியார்
காரியதரிசி: ராம. வெ. சு. கருப்பையா செட்டியார்
உதவி-காரியதரிசி: கண. மா. வெ. வெள்ளையப்ப செட்டியார்

## 38-வது வருடம் (1968)

தலைவர்: லெ. வி. வினைதித்தான் செட்டியார்
உப-தலைவர்: ராம. பெரி. பெரியகருப்பன் செட்டியார்
காரியதரிசி: பெரி. முப. முத்துப்பழனியப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: பி. முரு. பிச்சப்ப செட்டியார்

## 39-வது வருடம் (1969)

தலைவர்: முத்து. கரு. அரு. பழ. வெ. செல்லப்ப செட்டியார்
உப-தலைவர்: வெ. நா. அள. அளகப்ப செட்டியார்
காரியதரிசி: பெரி. அ. மு. ராமனுதன் செட்டியார்
உதவி-காரியதரிசி: ராம. வெ. சு. கருப்பையா செட்டியார்

## 40-வது வருடம் (1970)

தலைவர்: பெரி. அ. மு. கருப்பன் செட்டியார்
உப-தலைவர்: சுப. நா. நாச்சியப்ப செட்டியார்
காரியதரிசி: வெ. ராம. வெ. ராமனுதன் செட்டியார்
உதவி-காரியதரிசி: முப. அ. சொ. கருப்பையா செட்டியார்

## 41-வது வருடம் (1971)

தலைவர்: கண. மா. வெள்ளையப்ப செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. கருப்பன் செட்டியார்
காரியதரிசி: சி. ராம. முப. சாத்தப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: சோம. லெ. லெட்சுமணன் செட்டியார்

## 42-வது வருடம் (1972)

தலைவர்: சுப. நா. நாச்சியப்ப செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. கருப்பன் செட்டியார்
காரியதரிசி: அரு. சா. அரு. கருப்பன் செட்டியார்
உதவி-காரியதரிசி: கண. மா. வெ. வெள்ளையப்ப செட்டியார்

## 43-வது வருடம் (1973)

தலைவர்: அரு. சா. அரு. கருப்பன் செட்டியார்
உப-தலைவர்: பெரி. வீர. வீரப்ப செட்டியார்
காரியதரிசி: அழ. ச. அழ. அழகப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: அரு. கண. பழநியப்ப செட்டியார்

## 44-வது வருடம் (1974)

தலைவர்: கண. மா. கண. கண்ணப்ப செட்டியார்
உப-தலைவர்: நா. சா. சாத்தப்ப செட்டியார்
காரியதரிசி: சுப. நா. நாச்சியப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: நா. ராம. சு. சுந்தரம் செட்டியார்

## 45-வது வருடம் (1975)

தலைவர்: சுப. நா. நாச்சியப்ப செட்டியார்
உப-தலைவர்: கண. மா. வெ. வெள்ளையப்ப செட்டியார்
காரியதரிசி: பெரி. அ. மு. ராமனாதன் செட்டியார்
உதவி-காரியதரிசி: அரு. சா. அரு. முத்துப்பழனியப்ப செட்டியார்

## 46-வது வருடம் (1976)

தலைவர்: பெரி. அ. மு. ராமனாதன் செட்டியார்
உப-தலைவர்: சுப. நா. சுப்பிரமணியன் செட்டியார்
காரியதரிசி: ராம. வெ. சு. கருப்பையா செட்டியார்
உதவி-காரியதரிசி: வெ. ராம. வெ. ராமனாதன் செட்டியார்

## 47-வது வருடம் (1977)

தலைவர்: மெ. பெ. மெ. பெரிய கருப்பன் செட்டியார்
உப-தலைவர்: பெரி. அ. மு. ராமனாதன் செட்டியார்
காரியதரிசி: பி. முரு. பிச்சப்ப செட்டியார்
உதவி-காரியதரிசி: மெ. கரு. மெ. மெய்யப்ப செட்டியார்



Chettiars' Temple Society

Chettiars' Temple Society
Singapore

ஸ்டார் பிரஸ்
139/141, லவண்டர் ஸ்திரீட்,
சிங்கப்பூர்-12.

Chettiars' Temple Society
Singapore